**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,**

**காட்டுமன்னார்கோயில்**

முன்னிலை : திரு. M. சாம் யூஜின் ஜெபக்குமார், B.E.,B.L.,

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் ,

காட்டுமன்னார்கோயில்

**2026–ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 01 ஆம் நாள் சனிக்கிழமை**

**ஆண்டு பட்டியல் வழக்கு எண். 94/2023**

**(CNR NO: TNCD 190006072023)**

மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற 07.04.2021 நாளிட்ட

**ROC.No.814/2020/RG/F1**

**(P.Dis.No.36/2021** உத்தரவின்படி **CASE SUMMARY**

| | | |
|---|---|---|
| 01. | The Period of remand of the accused | A1, A2 – 28.04.2023 - 16.06.2023 |
| 02. | The date of filing of the Complaint/Final Report of the Court | 13.09.2023 |
| 03. | The date of committal of the case to the Court Session | Not Applicable |
| 04. | The date of questioning of the accused under sections 228, 240, 246 and 251 of the Code of Criminal Procedure, 1973, as the case may be | 09.02.2024 |
| 05. | Filing of all miscellaneous petitions and their results including the results on | Nil |

| | | |
|---|---|---|
| | challenge before superior Courts; except routine petitions like petitions under Section 317 of the Code. | |
| 06. | Date of examination in-chief and cross-examination of a witness. | PW1 to PW6 - 26.06.2025<br>PW7 to PW8 - 10.07.2025<br>PW9 - 04.09.2025<br>PW10 - 09.07.2026 |
| 07. | Date of examination of the accused under section 313 of the code; | 14.07.2026 |
| 08. | Details of abscondence of an accused and his appearance/production, as the case may be; and | Nil |
| 09. | grant of stay by superior Courts and the results thereof | Nil |

M. Sam Eugine Jebakumar

Digitally signed by M. Sam Eugine Jebakumar
Date: 2026.08.01 20:09:44 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்

நீதித்துறை நடுவர் ,காட்டுமன்னார்கோயில்

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,**
**காட்டுமன்னார்கோயில்**

முன்னிலை : திரு. M. சாம் யூஜின் ஜெபக்குமார், B.E.,B.L.,
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் ,
காட்டுமன்னார்கோயில்

**2026–ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 01 ஆம் நாள் சனிக்கிழமை**

**ஆண்டு பட்டியல் வழக்கு எண். 94/2023**

**(CNR NO: TNCD 190006072023)**

அரசுக்காக, காவல் ஆய்வாளர்,
காட்டுமன்னார்கோயில் காவல் நிலையம்,
காவல் நிலைய குற்ற எண். 400/2022 ... குற்றமுறையிடுபவர்

// எதிர் //

1. மனோ (எ) மணவாளன் (வயது 27/2026)
   த/பெ. ரவிக்குமார்
2. விநாயகன் (வயது 27/2026)
   த/பெ. அறிவழகன் ... எதிரிகள்

இவ்வழக்கானது, 20.07.2026 அன்று விசாரணைக்கு வந்தபொழுது 1வது எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R. முஹம்மது முஷரப், B.A.,LL.B., 2வது எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.பாலமுருகன், B.A.,B.L., அவர்கள் முன்னிலையாகியும், அரசு தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதங்களையும் கேட்டும் ஆவணங்களை பரிசீலித்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து வந்த இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்:

**/தீர்ப்புரை/**

இந்த வழக்கில் எதிரிகள் மீது இதச பிரிவுகள் 457, 380–ன் கீழ் குற்றம் முறையிடப்பட்டுள்ளது.

**<u>1. குற்ற இறுதி அறிக்கை சுருக்கம்</u>**

வழக்கானது காட்டுமன்னார்கோயில் காவல் சரகத்திற்குட்பட்ட ஷண்டன் கிராமத்தில் உள்ள ஊராட்சி ஒன்றிய அரசு நடுநிலைப்பள்ளியில் இவ்வழக்கின் வாதியான சித்ரா என்பவர் தலைமை ஆசிரியராக பணிபுரிந்து வந்துள்ளார் என்றும், 12.08.2022ந் தேதி மாலை சுமார் 04.15 மணிக்கு பள்ளி முடிந்து அனைத்து அறைகளையும் பூட்டிவிட்டு சென்றுள்ளார் என்றும்,

இந்நிலையில் 13.08.2022 ந் தேதி இரவு இவ்வழக்கின் எதிரிகளான மனோ (எ) மணவாளன், விநாயகன் ஆகிய இருவரும் பள்ளியின் தலைமை ஆசிரியர் அறையின் பூட்டை உடைத்து அறையில் வைக்கப்பட்டிருந்த ரூ.15,000/- மதிப்புள்ள இரண்டு மடிக்கணினிகள் (Laptop) மற்றும் ஒரு டேப் (Tab) ஆகியவற்றை எதிரிகள் இருவரும் சேர்ந்து தாங்கள் சுயலாபம் அடைய வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் இரவு கன்னக்களவு செய்து திருடிய குற்றம் புரிந்ததாக 1, 2 எதிரிகள் இ.த.ச.பிரிவுகள் 457, 380-ன் கீழ் குற்றம் புரிந்துள்ளார்கள் என அரசு தரப்பில் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2.** இவ்வழக்கு இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு எதிரிகள் அழைப்பாணையின் பெயரில் நீதிமன்றத்தில் முன்னிலையானவுடன் குவிமுச பிரிவு 207-ன் படி வழக்கு ஆவணங்கள் அனைத்தும் 04.12.2023 அன்று எதிரிகளுக்கு இலவசமாக வழங்கி போதிய அவகாசம் கொடுத்து 09.02.2024 அன்று குவிமுச பிரிவு 240-ன் படி எதிரிகள் மீது இ.த.ச.பிரிவுகள் 457, 380-ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றங்களுக்கு குற்றச்சாட்டுகள் வனைந்து வாசித்து விளக்கி வினவிய போது எதிரி குற்றத்தை மறுத்தார். எனவே அரசு தரப்பு சாட்சிக்காக ஒத்தி வைக்கப்பட்டது.

**3.** இந்த வழக்கில் அ.சா.1 முதல் அ.சா.10 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.8 வரையிலான சான்றாவணங்கள் மற்றும் சா.பொ.1 முதல் சா.பொ.3 வரை குறியிடப்பட்டது.

**4. அரசு தரப்பு சாட்சியங்களில் இருந்து தெரியவரும் அரசுதரப்பு வழக்கின் சுருக்கம்:**

அ.சா.1 ஷன்டன் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் தலைமை ஆசிரியர் என்றும், 12.08.2022 அன்று மாலை 4.15 மணிக்கு பள்ளி முடிந்து பள்ளியில் உள்ள அலுவலக அறை, வகுப்பறை என அனைத்து அறைகளையும் பூட்டிவிட்டு சென்றுள்ளதாகவும், மேற்படி பள்ளியில் இருக்கும் மேற்படி ஊரைச் சேர்ந்த சத்துணவு பொறுப்பாளரான அ.சா.2 விடுமுறை உட்பட, தினமும் காலையும் மாலையும் பள்ளியை சுற்றி வருவார் என்றும், இந்நிலையில் 13.02.2022 அன்று மாலை அ.சா.2 பார்த்தபோது பள்ளி பூட்டி இருந்த நிலையில், 14.08.2022 அன்று காலை பார்த்த போது தலைமை ஆசிரியர் அறையும் ஒரு வகுப்பறையும் திறந்திருந்துள்ளது என்றும், அ.சா.2 அ.சா.1க்கு அலைபேசி மூலம் மேற்படி அறை கதவின் பூட்டு உடைக்கப்பட்டிருந்த விபரத்தை தெரிவித்துள்ளதாகவும், தகவல்

கிடைத்து 1 மணி நேரத்திற்குள் அ.சா.1 மற்றும் அ.சா.3, அ.சா.4 உட்பட அனைத்து ஆசிரியர்களும் வந்து பார்த்தபோது அறைகளுக்குள் இருந்த 4 பீரோ உடைக்கப்பட்டு சா.பொ.1, சா.பொ.2 ஆகிய லேப்டாப் மற்றும் சா.பொ.3 டாப் ஆகியவை திருடு போய் உள்ளது என்றும், இது தொடர்பாக அ.சா.1 புகார்தாரர் காவல் நிலையத்தில் அ.சா.ஆ.1 புகார் அளித்துள்ளதாகவும், அந்த புகாரை பெற்றுக் கொண்ட அ.சா.9, மேற்படி புகாரின் மீது அ.சா.ஆ.4 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, வழக்கினை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு உடன் சம்பவ இடம் சென்று அ.சா.5 மற்றும் அ.சா.6 ஆகிய சாட்சிகள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு அ.சா.ஆ.2 பார்வை மகசர் மற்றும் அ.சா.ஆ.5 மாதிரி வரைபடம் ஆகியவை தயார் செய்து பின்னர் சாட்சிகள் அனைவரையும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்த பின்னர் மேல்விசாரணைக்காக அ.சா.10 வசம் அ.சா.9 ஒப்படைத்துள்ளதாகவும், மேற்படி வழக்கினை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு மேல்விசாரணை செய்த அ.சா.10, ஒரத்தூர் காவல் நிலைய குற்ற எண்.52/2023 வழக்கின் எதிரிகளான இந்த வழக்கின் எதிரிகள், ஒரத்தூர் காவல் நிலைய குற்ற வழக்கில் அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எதிரிகளை சம்பிரதாய கைது செய்து பின்னர் பிடி கட்டளை பெற்று நீதிமன்றத்தில் ஆஜர் செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டு பின்னர் அதே தேதியில் போலீஸ் காவலில் எடுத்து நிலையம் அழைத்து சென்று விசாரித்த போது எதிரி மணவாளன் என்பவர் தாமாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை அ.சா.7

மற்றும் அ.சா.8 சாட்சிகள் முன்னிலையில் பதிவு செய்து அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதியான அ.சா.ஆ.6 அடிப்படையில் சா.பொ.1 முதல் சா.பொ.3 வழக்கு சொத்துக்களை அ.சா.ஆ.7 கைப்பற்றுதல் மகசரில் மேற்படி இரு சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றி, அவற்றை அ.சா.ஆ.8 படிவம் 95 மூலம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்துள்ளார். பின்னர் வழக்கின் அனைத்து புலன் விசாரணையையும் முடித்து எதிரிகளுக்கு எதிராக குற்றம் முறையிட்டு இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**5.** இறுதி அறிக்கையில் சாட்சிகளாக பட்டியலிடப்பட்டவர்கள் அனைவரும் அ.சா.1 முதல் அ.சா.10 சாட்சிகளாக விசாரிக்கப்பட்டுள்ளனர். அவர்களது சாட்சியத்தில் எதிரிகளுக்கு பாதகமாக அவர்களை குற்றப்படுத்தும் விதமாக அமைந்துள்ள சாட்சியம் குறித்து குவிமுச பிரிவு 313(1)(ஆ)—ன் படி விசாரித்தபோது, எதிரிகள் அவற்றை பொய் சாட்சியம் எனவும் எதிரிகள் தரப்பில் விசாரிக்க சாட்சியம் உண்டு என்றும் தெரிவிக்கப்பட்டது. எனவே எதிரி தரப்பு சாட்சியத்திற்காக வாய்ப்பளிக்கப்பட்ட நிலையில் எதிரி தரப்பில் சாட்சியம் இல்லை என எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் செய்த மேற்குறிப்பின் படி எதிரிகள் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

**6. இனி இவ்வழக்கில் காண வேண்டிய தீர்வு யாதெனில் அரசு தரப்பில் எதிரிகள் மீது இ.த.ச.பிரிவுகள் 457, 380–ன் கீழான குற்றச்சாட்டுக்கள், சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் வாயிலாக சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.**

**7**. கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர், எதிரிகள் அ.சா.1–ன் பள்ளியில் இருந்த இந்த வழக்கு சொத்துக்களை கன்னக்களவு செய்து திருடியுள்ளனர் என்றும், எதிரிகள் மீதான வழக்கு அ.சா.1 முதல் அ.சா.10 சாட்சிகளின் வாய்மொழி சாட்சியம் மற்றும் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.8 சான்றாவணங்கள் மூலமும் நிரூபிக்கப்பட்டுள்ளதாகவும், எதிரி தொடர்ந்து திருட்டு சம்பவங்களில் ஈடுபட்டு வருவதாகவும் எதிரிக்கு அதிகபட்ச தண்டனை வழங்க வேண்டும் எனவும் வாதிட்டார்.

**8**. கற்றறிந்த எதிரிகள் தரப்பு வழக்கறிஞர், அரசு தரப்பு சாட்சிகள் அரசு தரப்பு வழக்கிற்கு முரணாக சாட்சியம் அளித்துள்ளனர் எனவும், இந்த வழக்கில் எதிரியை தொடர்புப்படுத்தும் விதமாக ஏற்க தகுந்த சாட்சியம் எதுவும் இல்லை எனவும், இந்த வழக்கின் புலன் விசாரணை அதிகாரி சரிவர புலன் விசாரணை மேற்கொள்ளாமல் குறைபாடுகள் கொண்ட ஒரு விசாரணை மேற்கொண்டு முழுமையற்ற ஒரு இறுதி அறிக்கை தாக்கல்

செய்துள்ளார் என்றும், இந்த வழக்கில் உள்ள சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் எதிரிகள் மீதான குற்றச்சாட்டை நிரூபிக்க போதுமானதாக இல்லை எனவும் சாட்சியத்தில் காணப்படும் சந்தேகங்களின் பலனை எதிரிகளுக்கு வழங்கி அவர்களை விடுதலை செய்ய வேண்டும் எனவும் வாதிட்டார்.

**9.** இரு தரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. வழக்கு கோப்புகள் பரிசீலிக்கப்பட்டது. அரசு தரப்பு வழக்கானது 12.08.2022 அன்று மாலை சுமார் 04.15 மணிக்கு ஷன்டன் கிராமத்தில் உள்ள ஊராட்சி ஒன்றிய அரசு நடுநிலை பள்ளி முடிந்து அனைத்து அறைகளையும் பூட்டிவிட்டு சென்றுள்ளனர் என்பதும் இந்நிலையில் 13.08.2022 அன்று இரவு இந்த எதிரிகள் இருவரும் பள்ளியின் தலைமை ஆசிரியர் அறையின் பூட்டை உடைத்து அறையில் வைக்கப்பட்டிருந்த ரூபாய் 15,000/- மதிப்புள்ள இரண்டு மடிக்கணினிகள் மற்றும் ஒரு டேப் ஆகியவற்றை சுய லாபம் அடையும் கெட்ட எண்ணத்தில் இரவு கன்னக்களவு செய்து திருடிய குற்றத்தை புரிந்துள்ளனர் என்பதாகும்.

**10.** அ.சா.1 இந்த வழக்கின் தகவலாளி மற்றும் திருடு போனதாக சொல்லப்படும் ஷன்டன் கிராமத்தில் உள்ள ஊராட்சி ஒன்றிய அரசு நடுநிலை

பள்ளியின் தலைமை ஆசிரியரும் ஆவார். அ.சா.1 அவரது சாட்சியத்தில், தான் மேற்படி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் தலைமை ஆசிரியராக பணிபுரிவதாகவும், 12.08.2022 அன்று மாலை 4.15 மணிக்கு பள்ளியில் உள்ள அலுவலக அறை, வகுப்பறை என அனைத்து அறைகளையும் பூட்டிவிட்டு வந்துவிட்டதாகவும், அந்த ஊரிலேயே அ.சா.1–ன் பள்ளியில் சத்துணவு பொறுப்பாளராக பணிபுரியும் அ.சா.2 விடுமுறை உட்பட தினமும் காலையும் மாலையும் பள்ளியை சுற்றி வருவார் என்றும், 13.08.2022 அன்று மாலை அ.சா.2 பார்த்தபோது பள்ளி உள்ளே பூட்டியிருந்த நிலையில், 14.08.2022 அன்று காலை பார்த்தபோது தலைமை ஆசிரியர் அறையும் ஒரு வகுப்பறையும் திறந்து இருந்ததாகவும், அ.சா.2 தனக்கு அலைபேசி மூலம் மேற்படி விபரத்தை தெரிவித்ததாகவும் தகவல் கிடைத்து ஒரு மணி நேரத்திற்குள் சுமார் 7.15 மணிக்கு அ.சா.1ம் மற்ற ஆசிரியர்களும் பள்ளிக்கு சென்று விட்டதாகவும் அங்கு சென்று பார்த்த போது மேற்படி அறைகளுக்குள் இருந்த 4 பீரோ உடைக்கப்பட்டு இருந்ததாகவும், 2 லேப்டாப் மற்றும் 1 டேப் ஆகியவை திருடு போயிருந்தது என்றும், இது தொடர்பாக புகார்தாரர் காவல் நிலையத்தில் அ.சா.ஆ.1 புகார் அளித்ததாகவும் அ.சா.1ன் பள்ளியில் திருடு போன பொருட்கள் இந்த வழக்கின் வழக்கு சொத்துக்களான சா.பொ.1 முதல் சா.பொ.3 ஆகிய சான்று பொருட்கள் என்றும் அடையாளம் காட்டி சாட்சியம் அளித்துள்ளார்.

**10.** அ.சா.1 அவரது சாட்சியத்தில் குறிப்பிட்டுள்ள திருட்டு சம்பவத்தை முதல் முதலில் பார்த்ததாக கூறியுள்ள அ.சா.2 அவரது சாட்சியத்தில், தான் ஷன்டன் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் சத்துணவு பொறுப்பாளராக பணிபுரிவதாகவும், தினமும் காலையும் மாலையும் பள்ளியை சுற்றி நடை பயிற்சி செய்வார் என்றும், அப்போது பள்ளியில் சுற்றி பார்ப்பார் என்றும், அத்தகைய நிலையில், 13.08.2022 அன்று மாலை பார்த்தபோது பள்ளி அறைகள் பூட்டியிருந்த நிலையில் 14.08.2022 அன்று காலை பார்த்த போது தலைமை ஆசிரியர் அறையும் பக்கத்தில் உள்ள ஒரு அறையும் பூட்டு உடைக்கப்பட்டு இருந்தது என்றும், உடனடியாக தான் அ.சா.1க்கு தகவல் அளித்ததாகவும், சிறிது நேரத்தில் அ.சா.1 வந்ததாகவும் உள்ளே சென்று பார்த்தபோது 2 லேப்டாப் மற்றும் 1 டேப் ஆகியவை திருடு போயிருந்தது என்றும் இது தொடர்பாக அ.சா.1 புகார்தாரர் காவல் நிலையத்தில் புகார் அளித்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.3 மேற்படி பள்ளியில் பட்டதாரி ஆசிரியராக பணிபுரிவதாகவும், அ.சா.4 மேற்படி பள்ளியில் இடைநிலை ஆசிரியராக பணி புரிவதாகவும் தெரிவித்து, இரு சாட்சிகளும், 12.08.2022 அன்று மாலை 4.15 மணிக்கு பள்ளி முடிந்து பள்ளியில் உள்ள அலுவலக அறை, வகுப்பறை என அனைத்து அறைகளையும் பூட்டிவிட்டு வந்துவிட்டதாகவும், 13.08.2022 மற்றும் 14.08.2022 ஆகிய இரு நாட்களும் விடுமுறை என்றும் 14.08.2022 அன்று காலை தலைமை ஆசிரியர் மேற்படி

சாட்சிகளை அலைபேசியில் அழைத்து பள்ளியின் கதவுகள் உடைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்ததாகவும் உடனே தாங்கள் சென்று பார்த்ததாகவும், அப்போது தலைமை ஆசிரியர் அறை பூட்டு உடைக்கப்பட்டு இருந்தது என்றும், உள்ளே இரண்டு பீரோ உடைக்கப்பட்டு அதில் உள்ள 2 லேப்டாப் மற்றும் 1 டேப் காணாமல் போயிருந்தது என்றும் இது தொடர்பாக அ.சா.1 புகார்தாரர் காவல் நிலையத்தில் புகார் அளித்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளனர்.

**11.** அ.சா.1 முதல் அ.சா.4 சாட்சிகளின் சாட்சியத்தில் இருந்து 13.08.2022 அன்று இரவு நேரத்தில் ஷன்டன் கிராமத்தில் உள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் உள்ள தலைமை ஆசிரியர் அறை மற்றும் ஒரு வகுப்பறை ஆகிய அறைகளின் பூட்டு உடைக்கப்பட்டு உள்ளே இருந்த 2 லேப்டாப் மற்றும் 1 டேப் ஆகியவை திருடப்பட்டுள்ளது என்றும், அவ்வாறு திருடப்பட்ட பொருட்கள் சா.பொ.1 முதல் சா.பொ.3 சான்றாவணங்கள் என்றும் அறிய முடிகிறது. மேற்படி சாட்சியமானது அரசு தரப்பு வழக்கை ஒத்துரைத்து அமைந்துள்ளது. எதிரிகள் தரப்பில் மேற்படி சாட்சிகளை குறுக்கு விசாரணை செய்த போதும் மேற்படி பொருண்மைகள் குறித்து எந்த ஒரு முரண்பாடும் ஏற்படுத்தப்படவில்லை. எனவே மேற்படி பொருண்மையானது அரசு தரப்பால் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு

நிரூபிக்கப்பட்டுள்ளதாக தீர்வு காணப்படுகிறது.

**12.** இந்நிலையில் மேற்படி குற்ற செயலை எதிரிகள் தான் செய்தனர் என்பதை நிரூபிக்க மேற்படி எதிரிகளை இந்த வழக்கில் தொடர்பு படுத்த சாட்சியம் எதுவும் உள்ளதா என பரிசீலிக்கும் போது, இந்த வழக்கின் 2 வது எதிரியான விநாயகம் என்பவருக்கு எதிராக எந்த ஒரு சாட்சியமும் காணப்படவில்லை. வழக்கு கோப்புகளை பரிசீலித்ததில், 1 வது எதிரி அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையிலேயே 2 வது எதிரி இந்த வழக்கில் சேர்க்கப்பட்டுள்ளதாக அறிய முடிகிறது. 1 வது எதிரியை பொறுத்து பார்க்கும்போது, அ.சா.1 அவரது சாட்சியத்தில் இந்த வழக்கு சொத்துக்களை திருடிய நபர் பெயர் மணவாளன் என்று காவல் நிலையத்தில் தெரிவித்ததாக அவரது சாட்சியத்தில் குறிப்பிட்டுள்ளார். எனினும் அத்தகைய சாட்சியமானது, கேள்வி நிலை சாட்சியம் ஆகும். எனவே அதன் அடிப்படையில் எதிரி மீதான குற்றச்சாட்டை தீர்வு காண இயலாது. அ.சா.2 முதல் அ.சா.4 சாட்சிகளும் அவர்களது சாட்சியத்தில் திருடிய நபர் பற்றி எதுவும் தெரிவிக்கவில்லை. மேலும், மேற்படி சாட்சிகள், அவர்களது குறுக்கு விசாரணையில் திருடிய நபர் யார் என்று தங்களுக்கு தெரியாது என்றும் இன்றுவரை திருடிய நபரை அவர்கள் பார்த்ததில்லை என்றும் தெரிவித்துள்ளனர். அ.சா.5 மற்றும் அ.சா.6 ஆகியோர் இந்த வழக்கின்

பார்வை மகசர் அ.சா.ஆ.2 ஐ தயாரித்ததற்கான சாட்சிகள் ஆவார். அ.சா.5 அவரது சாட்சியத்தில் திருடிய நபர் யார் என்று தனக்கு தெரியாது என்று சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.6 அவரது சாட்சியத்தில் திருடிய நபர் பற்றி தனக்கு எதுவும் தெரியும் என குறிப்பிடவில்லை.

**13.** அ.சா.7 மற்றும் அ.சா.8 ஆகியோர் முன்னிலையில் தான் எதிரி ஒப்புதல் வாக்குமூலம் அளித்ததாகவும், அதன் அனுமதிக்கப்பட்ட பகுதியான அ.சா.ஆ.7–ன் அடிப்படையில் இந்த வழக்கு சொத்துக்களான சா.பொ.1 முதல் சா.பொ.3 சான்று பொருட்களை அ.சா.ஆ.7 கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றியதாக குறிப்பிட்டு மேற்படி சாட்சிகள் விசாரிக்கப்பட்ட நிலையில் அ.சா.7 மற்றும் அ.சா.8 ஆகிய சாட்சிகள் இருவரும் அ.சா.ஆ.6 ஒப்புதல் வாக்குமூலத்திலும், அ.சா.ஆ.8 கைப்பற்றுதல் மகசரிலும் உள்ள கையொப்பம் தங்களுடையதல்ல என சாட்சியத்தில் தெரிவித்துள்ளனர். மேலும், மேற்படி சாட்சிகள் அவர்களது குறுக்கு விசாரணையில், திருடு போன பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டது பற்றியோ அதனை திருடியது யார் என்றோ தங்களுக்கு தெரியாது என்றும், தங்கள் முன்னிலையில் எந்த ஒரு பொருட்களும் கைப்பற்றப்படவில்லை என்றும் தெரிவித்துள்ளனர். எனவே, அ.சா.1 முதல் அ.சா.8 சாட்சிகளின் சாட்சியம் எதுவும் இந்த வழக்கு குற்ற சம்பவத்தில் எதிரிகளை தொடர்புபடுத்தும் விதமாக இல்லை. இந்நிலையில் எதிரிகளுக்கு

எதிரான குற்றச்சாட்டை நிரூபிக்கும் பொருட்டு வேறு தனிநபர் சாட்சிகள் யாரும் இந்த வழக்கில் விசாரிக்கப்படவில்லை. அ.சா.1 முதல் அ.சா.8 வரையிலான சாட்சிகளின் சாட்சியம் அரசு தரப்பிற்கு ஆதரவாக அமையாத நிலையில் இந்த வழக்கில் விசாரணை அதிகாரிகளான அ.சா.9 மற்றும் அ.சா.10 ஆகியோரின் சாட்சியத்தை மட்டும் வைத்து எதிரிகள் மீதான குற்றச்சாட்டு தொடர்பாக முடிவு காண இயலாது. எனவே, எதிரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டுகளை அரசு தரப்பு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்க தவறியுள்ளது. இத்தகைய நிலையில் அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியத்தில் காணப்படும் மேற்படி குறைபாடுகள் காரணமான சந்தேகங்களின் பலனை பெற எதிரிகள் தகுதி உடையவர்கள் ஆவார்கள்.

**14. இறுதியாக,**

எதிரிகள் மீது சுமத்தப்பட்ட இ.த.ச.பிரிவுகள் 457, 380–ன் கீழான குற்றச்சாட்டுகளை அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்காததால் மேற்கண்ட பிரிவுகளின் படி எதிரிகள் குற்றவாளிகள் அல்ல என தீர்மானித்து 1, 2 எதிரிகளை குவிமுச பிரிவு 248(1)–ன் படி விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

**15.** எதிரிகள் ஏற்கனவே இந்த நீதிமன்றத்திற்கு வழங்கியிருந்த பிணைமுறி பத்திரத்தை மேல்முறையீட்டு காலத்திற்கு பின் ரத்து செய்து உத்தரவிடப்படுகிறது.

**16.** இவ்வழக்கில் CP.NO.42/2023ல் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு சொத்தான Lenovo என்ற பெயருடைய கருப்பு நிற லேப்டாப் – 2, Dolby Atmos என்ற பெயருடைய கருப்பு நிற டேப் –1 (Tab) ஆகியவற்றினை மேல்முறையீட்டு காலத்திற்கு பின் வழக்கு சொத்தின் உரிமையாளர் மனுதாக்கல் செய்து பெற்றுக் கொள்ள உத்தரவிடப்படுகிறது. அவ்வாறு வழக்கு சொத்தின் உரிமையாளர் வழக்கு சொத்துக்களை உரிய நேரத்திற்குள் பெற்றுக் கொள்ள தவறும் பட்சத்தில் வழக்கு சொத்துக்களை அரசுடைமை ஆக்க உத்தரவிடப்படுகிறது.

என்னால் இத்தீர்ப்புரை தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு பின்னர் அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2026ம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 01ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

M. Sam Eugine Jebakumar

Digitally signed by M. Sam Eugine Jebakumar
Date: 2026.08.01 20:10:10 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்**
**நீதித்துறை நடுவர்,காட்டுமன்னார்கோயில்**

**அரசு தரப்பு சாட்சிகள்**

| சாட்சியின் குறியீடு | சாட்சியின் பெயர் | சாட்சியத்தின் தன்மை |
|---|---|---|
| அ.சா. 1 | சித்ரா. | புகார்தாரர். |
| அ.சா. 2 | அறிவழகன். | சாட்சி-1 க்கு அனுசரனையான சாட்சி. |
| அ.சா. 3 | அசோகன். | கேள்விநிலை சாட்சி. |
| அ.சா. 4 | நற்சோனை. | கேள்விநிலை சாட்சி. |
| அ.சா. 5 | பாலகிருஷ்ணன். | பார்வை மகசர் சாட்சி. |
| அ.சா. 6 | வடிவேல். | பார்வை மகசர் சாட்சி. |
| அ.சா. 7 | பாஸ்கரன். | ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசர் சாட்சி. |
| அ.சா. 8 | முருகன். | ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசர் சாட்சி. |
| அ.சா. 9 | திரு.மாணிக்கராஜா. (காவல் ஆய்வாளர்) | விசாரணை அதிகாரி. |
| அ.சா. 10 | திரு. ஏழுமலை (காவல் ஆய்வாளர் ஓய்வு) | விசாரணை அதிகாரி. |

**<u>அரசு தரப்பு சான்றாவணங்கள்</u>**

| சான்றாவணத்தின் குறியீடு | சான்றாவண விபரம் | சான்றாவணத்தை நிரூபித்தவர்/சான்றளித்தவர் |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 14.08.2022 தேதியிட்ட புகார். | அ.சா.1 |
| அ.சா.ஆ. 2 | 14.08.2022 தேதியிட்ட பார்வை மகசர். | அ.சா.10 |
| அ.சா.ஆ. 3 | 14.08.2022 தேதியிட்ட பார்வை மகசரில் 2 வதாக உள்ள அ.சா.6 ன் கையொப்பம். | அ.சா.10 |
| அ.சா.ஆ. 4 | 14.08.2022 தேதியிட்ட முதல் தகவல் அறிக்கை. | அ.சா.9 |
| அ.சா.ஆ. 5 | 14.08.2022 தேதியிட்ட மாதிரி வரைபடம். | அ.சா.10 |
| அ.சா.ஆ. 6 | 14.08.2022 தேதியிட்ட ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி. | அ.சா.10 |

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ. 7 | 03.05.2023 தேதியிட்ட கைப்பற்றுதல் மகசர். | அ.சா.10 |
| அ.சா.ஆ. 8 | 03.05.2023 தேதியிட்ட படிவம் – 95. | அ.சா.10 |

**அரசுதரப்பு சான்று பொருள்: சா.பொ.1–ஆன** CP.NO.42/2023ல் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு சொத்தான CP.NO.42/2023ல் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு சொத்தான Lenovo என்ற பெயருடைய கருப்பு நிற லேப்டாப் – 2, Dolby Atmos என்ற பெயருடைய கருப்பு நிற டேப் –1 (Tab)

**எதிரிகள் தரப்பு சாட்சி சான்றாவணம் மற்றும் சான்றுபொருள்:** இல்லை

**குறிப்பு:**

1. வழக்கின் முடிவு பற்றி காவல் துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.
2. எந்த ஒரு சாட்சியும் மூன்று தினங்களுக்கு மேல் நிறுத்தி வைத்து விசாரிக்கப்படவில்லை.
3. வழக்கு விசாரணையின் போது 2வது எதிரி பிணையிலும், 1வது எதிரி காவலிலும் இருந்து வந்தார்.

M. Sam Eugine Jebakumar
Digitally signed by M. Sam Eugine Jebakumar
Date: 2026.08.01 20:10:26 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர், காட்டுமன்னார்கோயில்**